# பிரிவு 2 - வயது 8 முதல் 10 வரை

பாடல் : 1

தலம்: திருஆவூர் பசுபதியீச்சரம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : நட்டபாடை தாளம் : ஆதி

குற்றம் அறுத்தார் குணத்தின் உள்ளார் கும்பிடுவார் தமக்கு அன்பு செய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணார் உறைபதி யாகுஞ் செறிகொள் மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச் சொற்கவி பாட நிதானம் நல்கப்
பற்றிய கையினர் வாழும் ஆவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. 1.8.6

பாடலின் பொருள்:

சிவபெருமான் தன்னை வழிபடும் அடியாரின் குற்றங்களைப் போக்குவார். குற்றமற்ற அடியாரிடத்து இருப்பார். தன்னை உணர்ந்தார்க்கு அன்பு செய்வார். நெற்றியில் ஒரு கண் உடையவர். ஒரு காளையை ஊர்தியாய்க் கொண்டவர். விழாக் காலங்களில் சிவபெருமானைப் போற்றிப் பாடும் பெண்களுக்குச் செல்வர் பொற்காசுகள் வழங்குவர். இப்படிப்பட்ட திருஆவூர்ப் பசுபதி ஈச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் போற்றிப் பாடுவோம்.

பாடல் : 2

தலம்: திருக்கருப்பறியலூர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : இந்தளம் தாளம் : செம்பை

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே. 2.31.1

பாடலின் பொருள்:

உறவினர் மீதும் உலகப் பொருள்கள் மீதும் உள்ள பற்றினை அறுத்து நற்பண்புகள் பொருந்திய அடியாரைத் தேவர்கள் வாழும் உலகங்களும் ஏற்கும்படிச் சிவபெருமான் அருள் செய்வார். இவர் கருப்பறியலூர் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். இப்பெருமான் இயற்கையாகவே அனைத்தும் அறிந்தவர்.

<u>பாடல் : 3</u>

தலம்: திருவாரூர் திருநாவுக்கரசு நாயனார் அருளியது
பண் : காந்தாரம் தாளம் : ரூபகம்

பாடிளம் பூதத்தினானும் பவளச் செவ்வாய் வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளைக் கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானும் ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே . 4.4.1

பாடலின் விளக்கம்:

ஆரூரில் விரும்பி எழுந்தருளியிருக்கும் பெருமானைச் சூழ்ந்து, இளைய பூதங்கள் பாடுகின்றன. சிவந்த வாயும், பவளம் போன்ற உடலும், தன் உடம்பின் பாதியாக இணைந்த அம்மையினால் ஏற்பட்ட அழகை உடையவன். வானில் உலவக்கூடிய வெண்பிறையைச் சூடியவனும், ஒளிவிளங்கும், சூலப்படையை உடையவனும் ஆடுகின்ற இளைய பாம்பினையும் சிவபெருமான் கொண்டுள்ளான்.

<u>பாடல் : 4</u>

தலம்: திருக்கடவூர் மயானம் நம்பி ஆரூரர் அருளியது
பண் : பழம்பஞ்சுரம் தாளம் :ஆதி

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடும்
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே. 7.53.1

பாடலின் பொருள்:

திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானார், நறுமணம் நிறைந்த கொன்றை மாலையையும், பிறையையும் திருமுடியிற் சூடிக் கொண்டு, உமாதேவியோடு, பூதப்படைகள் சூழ, வெள்ளி மலையின்மேல் ஒரு மாணிக்கமலை வருவதுபோல விடையின்மேல் வருவார்; ‘திருமால், பிரமன், இந்திரன்’ போன்ற தேவர்கட்கும், நாகலோகத்தார், அசுரர்களுக்கும் அவரே தலைவர்.